2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதுமிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஏற்கெனவே திட்டமிடப்பட்டு, ஒரிடத்திலே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்படுகிறபோது வழியோர கிராமங்கள் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பலன் தரப்படுவதற்கு, திட்டம் தீட்டப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது விடுபட்ட பகுதியினர், எங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய இலாகா சார்பில் விரைவிலே அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஏனென்றால், நிதி வேண்டும், நிதி இல்லாமல் அதைச் செய்ய இயலாது. இருக்கின்ற நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக விடுபட்ட இடங்களையும் சேர்த்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் காலத்தில் வழங்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***3128—திரு. வி.வி. ராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றத்தில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 11 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத்தவிர 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும்

17 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருப்பரங்குன்றத்தில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மதுரை மாவட்டத்தில் பல்வேறு கல்லூரிகள் இருப்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, திருப்பரங்குன்றம் தொகுதியைப் பொறுத்தவரைக்கும், உயர் கல்வித் துறையின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு இட வசதியும், பல்வேறு வசதிகளும் இருக்கக்கூடிய ஒரு நல்ல தொகுதி என்பதை தாங்கள் உணர்வீர்கள். அது மாநகராட்சிப் பகுதியும், கிராமப் பகுதியும் இணைந்த தொகுதியாக இருக்கிறது. மாநகராட்சிப் பகுதியில் தாங்கள் குறிப்பிடுகின்ற 2 ஏக்கர் இடமாக இருந்தாலும் சரி, கிராமப் பகுதியில் குறிப்பிடுகிற 5 ஏக்கர் நிலமாக இருந்தாலும் சரி, அதற்குரிய அமைப்புகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் சமுதாய அறக்கட்டளைகள் நிருவகிக்கும் கல்லூரிகள் மட்டுமே இருக்கின்றன. அரசுக் கல்லூரி வருவதற்கு மிகப் பெரிய வாய்ப்பு இருக்கின்றது. ஏனென்றால், அங்கிருக்கின்ற ஏழையெளிய மாணவர்கள் படிப்பதற்கான வசதிக்கேற்றபடி அரசுக் கல்லூரி வருமேயானால் நிச்சயமாக மிகச் சிறப்புக்குரிய வாய்ப்பு இருக்கும். ஏனெனில், தாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 10 அரசு கல்லூரிகளும், 10 இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையைச் சார்ந்த கல்லூரிகளும், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த ஒரு கல்லூரியும் வருகிறது என்கிறபோது நாங்கள் மகிழ்ச்சி தெரிவித்தோம். காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலும், மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்திலும் 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றியபோது எப்படி மகிழ்ந்தோமோ, அதேபோன்று 21 கல்லூரிகளைக் கொண்டு வருகிறோம் என்று கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறோம். ஆனாலும்கூட, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அறநிலையத் துறையில் இருக்கின்ற ஆன்மீக நகரங்களாகக் கருதப்படுகிற திருப்பரங்குன்றம், மேலூர், அழகர்கோவில் ஆகிய பகுதிகளை மட்டும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தவிர்த்துவிட்டாரா, மறந்துவிட்டாரா என்பது தெரியவில்லை. அந்த வகையிலும் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறைமூலம் நடத்தப்படுகின்ற கூட்டுறவு பயிற்சிப் பள்ளி திருப்பரங்குன்றம் தொகுதியில் அமைந்திருக்கின்றது. ஆகவே, திருப்பரங்குன்றம் தொகுதியில் ஓர் அரசுக் கல்லூரி வருமேயானால், ஏழையெளிய நடுத்தர மாணவர்கள் பயில்வதற்கு வசதியாக இருக்குமென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதற்கான விஷயங்களும் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: அதற்கும் வைத்திருக்கின்றேன். மதுரை மாவட்டத்தின்மீது பற்று கொண்ட, உறவு கொண்ட மதிப்பிற்குரிய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறவு முறையில் கேட்கின்றார்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் கடம்பூர் ராஜூவாக இருந்தாலும் சரி,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்லூர் ராஜூ.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: இங்கே அமர்ந்திருக்கின்ற திரு. செல்லூர் ராஜூவாக இருந்தாலும், அதேபோன்று இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் திரு. மூர்த்தியாக இருந்தாலும், அதேபோன்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் பழனிவேல் தியாக ராஜனாக இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. தளபதியாக இருந்தாலும், அவர்கள் என்னைப்

பார்க்கிறபோதெல்லாம் எங்கள் தொகுதிக்கு அரசுக் கல்லூரி வேண்டும், கல்லூரி வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, பெரும்பாலும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுமே தங்கள் தொகுதிகளுக்கு கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரிகள் என்பது எப்படி உருவாக்கப்படும் என்று நான் முதலிலே சொல்லியிருக்கின்றேன். நீங்களே சொன்னதுபோன்று தமிழக முதல்வர் அவர்களின் ஆதரவின் காரணமாக 21 கலைக் கல்லூரிகளை உருவாக்குவதற்கு, இந்த ஆண்டு இவ்வளவு நிதி நெருக்கடி இருக்கின்ற காலத்திலும் அனுமதித்திருக்கின்ற தலைவருக்கு முதலில் நன்றி சொல்லுங்கள்.

முற்பகல் 10–10

21 கல்லூரிகள் அமைக்க அனுமதி தந்திருக்கிறார்கள். பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள் 41 இருந்தன என்று நீங்கள் சொன்னீர்கள். 41 கல்லூரிகளில், 14 கல்லூரிகள்தான் அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. எது எப்படியிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், திருப்பரங்குன்றம் தொகுதி மட்டுமல்ல, மதுரையிலுள்ள அனைத்துத் தொகுதிகளிலுமுள்ள மாணவர்களுடைய எண்ணிக்கை குறித்த விவரங்களை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட அன்றே பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். அந்தத் தொகுதியிலுள்ள கல்லூரிகளில் எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மதுரை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் 10,439 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு நீங்கள் முதலில் முயற்சி செய்யுங்கள். அந்தக் கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்கான எல்லா வாய்ப்புகளும் வழங்கப்படும். ஆகவே, இதை அடிக்கடி வலியுறுத்த வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, அடுத்து வருகின்ற கல்வி ஆண்டுகளில் அங்கே கல்லூரி நிறுவுவதற்கான ஏற்பாடுகள் பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், ரத்தினச் சுருக்கமாகப் பேசுங்கள்.

2021 செப்டம்பர் 9]

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரில் பேசியபோது, பதிலுரையாக மிகத் தெளிவாகச் சொன்னார்கள். 25 விழுக்காடு அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் என்று அன்றைக்குக் கொடுத்த உறுதியினையடுத்து, அதற்கான ஆணையையும் நேற்று பிறப்பித்திருக்கிறார்கள். அரசுக் கல்லூரிகளில் மட்டுமல்லாமல், அரசு உதவி பெறுகின்ற* Aided colleges *அனைத்திற்கும் கண்டிப்பாக 25 விழுக்காடு கூடுதல் ஒதுக்கீடு செய்வது மட்டுமல்லாமல், அந்த கூடுதல் இட ஒதுக்கீட்டில், கண்டிப்பாக 25 விழுக்காடு மாணவர்களைக் கூடுதலாக சேர்க்க வேண்டும் என்று தாங்கள் ஆணையை பிறப்பித்தால் மிகச் சிறப்பாக இருக்கும். ஏனென்றால், அரசு உதவி பெறுகிற பல்வேறு கல்லூரிகளில்,* Self-finance-*க்கு முதலில், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஆணை பிறப்பிக்கப்படுமா என்று கேளுங்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றை மட்டும் கூறிவிடுகிறேன்.* Self-finance College-*க்கு முதலில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். அதற்குப் பிறகுதான்* regular college-*க்கு* admission *போடுகிறார்கள். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முதலில் தாங்கள் வைத்திருக்கிற சுய உதவித் துறையில் மட்டும்* admission *போடுகிறார்கள். ஏனெனில். மாணவர்கள் ஆர்வத்தோடு சேருகிற துறைகளில் இன்றைக்கு இடங்கள் மீதம் இல்லை.* Physics, Chemistry *போன்ற துறைகளில் சில இடங்கள் மட்டும்தான் காலியாக உள்ளன. வணிகவியல் துறையிலோ, வணிகவியலைச் சார்ந்த* B.B.A., B.C.A., English Literature *போன்ற துறைகளிலோ காலியிடங்கள் இல்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாத செய்திகள் இல்லை. ஆகவே, அன்புகூர்ந்து, அருள்கூர்ந்து, அரசு உதவி பெறுகிற கல்லூரிகளுக்கும் கூடுதல் இட ஒதுக்கீடு செய்து, அதில் கண்டிப்பாக ஏழை மாணவர்களுக்கு இடமளிக்கிற வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அன்போடு அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வெளியிடப்பட்டிருக்கும் அரசாணை, 25 சதவிகித கூடுதல் இட ஒதுக்கீடு என்பது அரசுக் கல்லூரிகளுக்கு மட்டும்தான். இந்த ஆண்டு +2 எழுதிய அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றிருக்கின்ற விகிதம் அதிகரித்திருக்கிற காரணத்தினால், நாங்கள் அரசுக் கல்லூரிகளில் 25 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினை அதிகரித்திருக்கிறோம். தனியார் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் எல்லாம், கடந்த காலங்களிலேயே 10 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினை அதிகரித்துக்கொள்ளலாம் என்று இருந்தது. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு ஆலோசித்து 10 சதவிகிதத்தை 15 சதவிகிதமாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நான் அன்றே சொன்னதைப்போல, மதுரையிலேயிருக்கின்ற பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியை வருகிற ஆண்டுகளில் தரமுயர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கல்லூரிகள் பற்றி ஏதேனும் கருத்துகள் இருந்தால், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசியபோது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மறந்துவிட்டாரா என்று கேட்டிருந்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கொள்கை என்பது, இந்த 5 ஆண்டுகளை நோக்கி அல்ல, 10 ஆண்டுகள் திட்டம், கல்விக்கென்று தனியாக ஓர் அறிவிப்பை அறிவித்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டுகூட ஆகவில்லை, நான்கு மாதங்கள்தான் முடிந்திருக்கின்றன. தமிழகத்தின் வரலாற்றிலேயே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் வரலாற்றிலேயே 10 கல்லூரிகளை முதன்முதலில் அறிவித்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கல்லூரி கேட்டதில் தவறு இல்லை. ஆனால், கேட்பதற்கு முன்பாக இந்து

2021 செப்டம்பர் 9]

சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பிலே மதுரைக்காக அறிவித்த திட்டங்களைப் பற்றிச் சொல்லி, அதற்கு நன்றி சொல்லி, கல்லூரியைக் கேட்டிருந்தால் அதை நாங்கள் வரவேற்றிருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுடைய மாவட்ட அமைச்சர்கள், அன்பிற்கினிய மாண்புமிகு திரு. மூர்த்தி அவர்களும், மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அதோடு சேர்த்து, முதன்முதலாக யாத்ரீகர்கள் தங்குவதற்காக, பக்தர்கள் தங்கும் விடுதி என்ற பெயரில் விடுதி அமைக்க ரூ.35 கோடி அறிவித்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரைக்குத்தான் அறிவித்திருக்கின்றோம்.

அதேபோன்று, போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகவும், வருகின்ற வாகனங்களை நிறுத்துமிடத்திற்காகவும் மதுரையில் ரூ.10 கோடி அளவில் வாகன நிறுத்துமிடம் அமைப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்ற அறிவிப்பையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள்* College *கொடுத்திருக்கிறீர்களா என்று சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *உங்களுடைய எண்ணங்களை, நிச்சயம் இந்த பத்தாண்டுக்குள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆண்டுகள் என்பது, அடுத்தும், மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சிதான் இந்தத் தமிழகத்திலே நடக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*